

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில் நேற்று (17.6.2024) தமது இல்லத்தில் சென்னை தெற்கு மாவட்டம், சைதை கிழக்குப் பகுதி, கோட்டூர் பொன்னியம்மன் கோயில் தெருவைச் சேர்ந்த நினைவில் வாழும் எம்.முனுசாமி – எம்.முருவம்மாள் ஆகியோரின் மகன் மாணவர் அணி வட்ட துணை அமைப்பாளர் எம்.மனோகரன் – எம்.பிரியதர்ஷினி ஆகியோரின் திருமணத்தை நடத்தி வைத்தார். இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, துணை மேயர் மு.மகேஷ்குமார், மாவட்ட அவைத் தலைவர் எஸ். குணசேகரன், பகுதி கழக செயலாளர்கள் இரா.துரைராஜ் எம்.சி., எம். கிருஷ்ணமூர்த்தி எம்.சி., வட்ட கழக செயலாளர் கோட்டூர் க.மணி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் வே.ஆனந்தம் எம்.சி., பா.அருண்குமார், எம்.பார்த்திபன், உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி, காணை தெற்கு ஒன்றியத்தில் விக்கிரவாண்டி தொகுதி வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவாவை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைப்பதற்காக தேர்தல் பணிமனையை உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி திறந்து வைத்தார். பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மாவட்ட பொறுப்பாளர் டாக்டர். பொன்.கௌதமசிகாமணி, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், ஒன்றியச் செயலாளர் கல்பட்டு வி. இராஜா, ஒன்றிய குழுத் தலைவர் கலைச்செல்வி உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

### டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. தலைமை! ‘இந்தியா’ கூட்டணி நிர்வாகிகள் முன்னிலை!

# திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தில் சசிகாந்த் செந்தில் எம்.பி. இன்று நன்றி தெரிவிக்கிறார்!

## மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. அறிக்கை!



திருவள்ளூர், ஜூன் 18-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் டி.ஜே.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நடைபெற்று முடிந்த 2024 நாடாளுமன்ற தேர்தலில் திருவள்ளூர் (தனி) நாடாளுமன்ற தொகுதியில் இந்தியா கூட்டணி வேட்பாளராக போட்டியிட்ட சசிகாந்த் செந்திலை 5,72,155 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்த திருவள்ளூர் கிழக்கு மாவட்ட வாக்காளர்களுக்கு இன்று (18.06.2024) செவ்வாய்கிழமை காலை 8.00 மணி முதல் நன்றி தெரிவிக்கிறார். நிகழ்ச்சியில் நாடாளுமன்ற தொகுதி பொறுப்பாளர் இரா.கிரிராஜன் எம்.பி., காங்கிரஸ் துரைசந்திரசேகர் எம்.எல்.ஏ, ஏ.ஜி.சிதம்பரம், கும்முடிப்பூண்டி தொகுதி பொறுப்பாளர் பி.டி.அரசகுமார் பொன்னேரி தொகுதி பொறுப்பாளர் அழகிரி சதாசிவம் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள் தலைமை செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், இந்தியா கூட்டணி கட்சிகளின் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள், வாக்குச்சாவடி பாகமுகவர்கள் கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்

இன்று ( 18.06.2024 செவ்வாய்கிழமை) கும்முடிப்பூண்டி தெற்கு ஒன்றியம்

காலை: 8.00 மணி புதுவாயல்,

காலை:8.15 மணி பெருவாயல், காலை:8.30 மணி கவரைப்பேட்டை, காலை:8.45 வேற்காடு, கும்முடிப்பூண்டி பேரூர்

காலை: 9.00 மணி மேட்டுக்காலனி, காலை: 9.15 மணி பேரறிஞர் அண்ணா சிலை, காலை: 9.30 மணி பெருந்தலைவர் காமராஜர் சிலை, கும்முடிப்பூண்டி கிழக்கு ஒன்றியம்

காலை: 10.00 மணி பெத்திகுப்பம், பிற்பகல்: 11.00 மணி சிந்தலகுப்பம் பொன்னேரி தொகுதி ஆரணி பேரூர்

மாலை: 4.00 மணி பேரறிஞர் அண்ணா சிலை எல்லாபுரம் வடக்கு ஒன்றியம்

மாலை: 4.30 மணி கொசவன்பேட்டை மாலை: 4.45 மணி பெரிபாளையம் பேருந்து நிலையம், மாலை 5.00 மணி தண்டலம் கடைவீதி, மாலை 5.15 மணி பாலவாக்கம் கடைவீதி ஊத்துக்கோட்டை பேரூர்

மாலை: 6.00 மணி ஊத்துக்கோட்டை பேரறிஞர் அண்ணா சிலை ஆகிய இடங்களில் வாக்காளர்களை சந்தித்து சசிகாந்த் செந்தில் எம்.பி. நன்றி தெரிவிக்கிறார்.

இவ்வாறு டி.ஜே.கோவிந்தராஜன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### திருவள்ளூர் மேற்கு மாவட்டம்

# திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதியில் சசிகாந்த் செந்தில் எம்.பி. வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்!

## மாவட்டச் செயலாளர் – திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ., அறிவிப்பு!



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருவள்ளூர் நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட திருவள்ளூர் சட்டமன்ற தொகுதி திருவள்ளூர் நகரத்தில் நாளை (19.06.2024 புதன் கிழமை( காலை 9.00 மணியளவில் திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் சசிகாந்த் செந்தில் நன்றி தெரிவிக்கும் இந்நிகழ்ச்சி திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி.எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. ஆகிய எனது தலைமையிலும் தலைமை செயற்குழு உறுப்பினரும் திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி. இராஜேந்திரன் முன்னிலையில் திருவள்ளூர் அரசு மருத்துவ கல்லூரி அருகில் உள்ள பேருந்து நிலையத்திலிருந்து துவங்கப்படவுள்ளது இந் நிகழ்ச்சியில் திருவள்ளூர் நாடாளுமன்ற தொகுதி பொறுப்பாளர் இரா.கிரிராஜன் எம்.பி. திருவள்ளூர் சட்ட மன்ற தொகுதி பார்வையாளர் ராஜாகுப்புசாமி கலந்து கொள்கிறார்கள் எனவே இந்தியா கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், நகர, ஒன்றிய, கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், வட்ட செயலாளர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் அனைவரும் நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

### நன்றி தெரிவிக்கும் இடங்கள்

| நேரம் | இடம் | நேரம் | இடம் |
|---|---|---|---|
| காலை 9.00 மணி | டோல்கேட் | காலை 10.00 மணி | பஞ்சமுக ஆஞ்சநேயர் கோவில் |
| காலை 9.10 மணி | நேதாஜி சாலை | | |
| காலை 9.15 மணி | ஜவகர் நகர் | காலை 10.05 மணி | எம்.ஜி.ஆர். நகர் |
| காலை 9.20 மணி | பெருமாள் செட்டி தெரு | காலை 10.10 மணி | இந்திரா நகர் |
| காலை 9.25 மணி | வடக்கு ராஜ வீதி | காலை 10.15 மணி | கலைஞர் நகர் |
| காலை 9.30 மணி | தேரடி | காலை 10.30 மணி | பெரியகுப்பம் |
| காலை 9.35 மணி | காமராஜர் சிலை | காலை 10.35 மணி | சித்தி விநாயகர் கோவில் தெரு |
| காலை 9.40 மணி | வி.எம்.நகர் | | |
| காலை 9.45 மணி | கணபதி நகர் | காலை 10.40 மணி : கடம்பத்தூர் கிழக்கு ஒன்றியம் வெங்கத்தூர் ஊராட்சி ஒண்டிக்குப்பம் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் சாலை, அண்ணா தெரு, கருணாநிதி தெரு, இந்திரா காந்தி சிலை அருகில் நிறைவு செய்கிறார். | |
| காலை 9.50 மணி | புகழேந்தி தெரு | | |
| காலை 9.55 மணி | என்.ஜி.ஓ. காலனி | | |

**திருத்தணி எஸ்.சந்திரன்,எம்.எல்.ஏ.,**
செயலாளர், திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.



சென்னை வடக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வை. கௌதமன் தலைமையில் 550 பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. பள்ளி உபகரணங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.ஜெ.எபிநேசர் எம்.எல்.ஏ., பகுதி செயலாளர்கள் க.ஜெயராமன், அ.முருகன், வட்ட செயலாளர் வி.முருகன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### இராமேஸ்வரத்தில் விபத்தில் இறந்த

# மீனவக் குடும்பங்களுக்கு கழகத்தின் சார்பில் நிதியுதவி!

இராமேஸ்வரம், ஜூன் 18–

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் வட்டம், பாம்பன் அன்னை நகரைச் சேர்ந்த மீனவர்கள் பரக்கதுல்லா, ஆரோக்கியம் ஆகிய இருவரும் 15.06.2024 அன்று கடலுக்கு மீன் பிடிக்க சென்ற பொழுது ஏற்பட்ட திடீர் விபத்தில் மரணமடைந்ததையொட்டி அவர்களின் குடும்பத்திற்கு கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க நிவாரண உதவித்தொகை வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் இறந்த மீனவர்களின் இல்லத்திற்குச் சென்று அரசு வழங்கிய நிவாரணத் தொகையுடன் இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ,நாடாளுமன்ற உறுப்பினர் கே. நவாஸ் கனி ஆகிய இருவரும் அவர்களது சொந்த நிதியிலிருந்தும் நிதி வழங்கினார்கள்,உடன் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் விஷ்ணு சந்திரன் மற்றும் அரசு அதிகாரிகள் உடன் இருந்தனர்.

### வருவாய்த்துறையில் ‘முதலில் வருவோருக்கு முதலில் சேவை’ திட்டத்தில்

# ‘பட்டாக்களுக்கு ஒரே வரிசை எண்’ எனும் தவறான செய்தி!

## வருவாய்த்துறை விளக்கம்!

**சென்னை, ஜூன் 18**

**வருவாய்த் துறையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள “முதலில் வருவோருக்கு முதலில் சேவை” என்ற நடைமுறையில் நேரடி பட்டா மற்றும் உட்பிரிவு பட்டா ஆகிய இரண்டுக்கும் ஒரே வரிசை எண் அளிக்கப்பட்டுள்ளது என்ற தவறான செய்தி குறித்த வருவாய்த் துறையின் அறிக்கை வருமாறு:-**

நில உடைமை ஆவணங்கள் கணினிப்படுத்தப்பட்டு “தமிழ் நிலம்” எனும் இணையம் சார்ந்த மென்பொருள் மூலமாக இணையவழி பட்டா மாறுதல் ஆணைகள் வருவாய்த்துறை அலுவலர்களால் பிறப்பிக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் பொதுமக்கள் தங்களுக்கு அருகில் உள்ள பொது சேவை மையத்திலோ அல்லது இணையவழியில் HTTPS://ESERVICES.TN.GOV.IN என்ற இணைய முகவரியில் பட்டா மாற்றம் கோரி விண்ணப்பம் செய்து பட்டா மாறுதல் உத்தரவுகளை பெற்று வருகின்றனர். இதில் பட்டா மாறுதல் கோரும் மனுவின் மீதான நடவடிக்கையானது குறுஞ்செய்தி (SMS) மூலம் மனுதாரருக்கு தெரிவிக்கப்படுகிறது.

பட்டாமாற்றம் கோரும் மனுக்கள் இரண்டு வகைப்படும். ஒன்று உட்பிரிவுடன் கூடிய பட்டாமாற்றம்; மற்றொன்று உட்பிரிவு இல்லாத நேரடி பட்டாமாற்றம். இதன்படி, உட்பிரிவுடன் கூடிய பட்டாமாற்றம் கோரும் விண்ணப்பங்களுக்கும், உட்பிரிவு இல்லாத நேரடிப்பட்டா மாற்றம் கோரும் விண்ணப்பங்களுக்கும் தனித்தனியே வரிசை எண் வழங்கப்பட்டு அவற்றின்மீது உரிய கால அளவில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு வருகிறது. இவ்வரசு பொறுப்பேற்றது முதல், மூன்று ஆண்டுகளில் இணையவழியில் 81.76 இலட்சம் பட்டா மாறுதல் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

பொதுமக்களுக்கு இச்சேவைகளை கூடுதலான வெளிப்படைத் தன்மையுடன் விரைந்து வழங்க ஏதுவாக விண்ணப்பங்களைப் பெற்ற வரிசைப்படி தீர்வு செய்யும் நடைமுறை 4.6.2024 முதல் உட்பிரிவு இல்லாத நேரடி பட்டா மாற்றம் கோரும் விண்ணப்பங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

உட்பிரிவு இல்லாத நேரடி பட்டா மாற்றம் கோரும் விண்ணப்பங்களில் “முதலில் வருவோருக்கு முதலில் சேவை” என்ற நடைமுறையில் 4.6.2024 முதல் 16.6.2024 வரை 15,484 பட்டா மாற்ற உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மேலும், உட்பிரிவுடன் கூடிய பட்டா மாற்ற விண்ணப்பங்களில் “முதலில் வருவோருக்கு முதலில் சேவை” என்ற நடைமுறை விரைவில் அமல்படுத்தப்படவுள்ளது.

எனவே, இரண்டு வகையான விண்ணப்பங்களுக்கும் ஒரே வரிசை எண் வழங்கப்படுகிறது என்ற செய்தி தவறானதாகும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு வருவாய்த்துறையின் விளக்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### விழுப்புரம் வடக்கு மாவட்டம்

# மாவட்ட அவைத்தலைவர் பொறுப்புக்கான தேர்தல்

# தேர்தல் முடிவு

## தலைமைக் கழக அறிவிப்பு

“திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், விழுப்புரம் வடக்கு மாவட்ட அவைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட டாக்டர் ப.சேகர் அவர்கள் மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட காரணத்தால்; விழுப்புரம் வடக்கு மாவட்டம், மாவட்ட அவைத்தலைவர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, ஜூன் 17 (திங்கட்கிழமை) அன்று ரூ.25000/வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும். “ என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

விழுப்புரம் வடக்கு மாவட்டம், மாவட்ட அவைத்தலைவர் பொறுப்புக்கு செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

**விழுப்புரம் வடக்கு மாவட்டம், மாவட்ட அவைத்தலைவராக, திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான்,** தளபதி இல்லம், 59, தேசூர் பாட்டை சாலை, கிருஷ்ணாபுரம், செஞ்சி, விழுப்புரம் மாவட்டம்-604 202. அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 17.06.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

# கழக மாநில மகளிரணி - மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் கூட்டம்!

## ஜெ.ஹெலன் டேவிட்சன் - நாமக்கல் ப.ராணி அறிவிப்பு!

தி.மு.க. மாநில மகளிரணி, மகளிர் தொண்டரணி, பிரச்சாரக்குழு, வலைத்தளக்குழு, ஆலோசனைக்குழு நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் சென்னை - அண்ணா அறிவாலயத்தில், நாளை (19/06/2024 - புதன் கிழமை) மதியம் 12 மணியளவில், மாநில மகளிரணித் தலைவர் விஜயா தாயன்பன் தலைமையிலும், மகளிரணி இணைச்செயலாளர் குமரி விஜயகுமார், மகளிர் தொண்டரணி இணைச்செயலாளர் தமிழரசி ரவிக்குமார் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறும்.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்துகொள்ள கேட்டுக் கொள்கிறோம்.

பொருள்: 1.தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா.
2.கழக ஆக்கப் பணிகள்.

**ஜெ.ஹெலன் டேவிட்சன்**
மகளிரணிச் செயலாளர்

**நாமக்கல் ப.ராணி**
மகளிர் தொண்டரணிச் செயலாளர்




கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி சென்னை மேற்கு மாவட்டம் திருவல்லிக்கேணி 119 வது வட்ட செயலாளர் க.வே.மோகன் ஏற்பாட்டில் நடந்த நலத்திட்டங்கள் வழங்கும் நிகழ்ச்சியில் சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, பேச்சாளர் சைதை சாதிக், திருவல்லிக்கேணி பகுதி செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், திருவல்லிக்கேணி 119 வது மாமன்ற உறுப்பினர் கமலா செழியன், தி.மு.க. கொள்கை பரப்பு பாடகர் ஆசிப் இறையன்பன் ஆகியோர் பங்கேற்றனர். இந்நிகழ்வில் ஏராளமான பெண்களுக்கு நல திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.